# 06 & 07 ஆகஸ்ட் 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## முக்கிய தினங்கள்

### 06 ஆகஸ்ட் 2023 – ஹிரோஷிமா தினம்

- ஹிரோஷிமா தினம் ஆகஸ்ட் 6 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானிய நகரமான ஹிரோஷிமா மீது அணுகுண்டு தாக்குதலின் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது மற்றும் அணுகுண்டுகளின் பேரழிவு விளைவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- லிட்டில் பாய் யுரேனியத்தால் செய்யப்பட்ட வெடிகுண்டு.
- அமெரிக்க B-29 குண்டுவீச்சாளர் எனோலா கே, ஆகஸ்ட் 6, 1945 அன்று ஹிரோஷிமா மீது 'லிட்டில் பாய்'வை வீசினார்.
- அணுகுண்டு தாக்குதல் 10,000 பேரைக் கொன்றது மற்றும் சில நொடிகளில் குறிப்பிடத்தக்க அழிவை ஏற்படுத்தியது.
- 1964 ல் ஹிரோஷிமாவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைதிச் சுடர். அர்ப்பணிக்கப்பட்ட து.
- சுடர் இன்னும் எரிகிறது மற்றும் கிரகத்தில் உள்ள அனைத்து அணுகுண்டுகளும் அழிக்கப்படும் வரை தொடரும்

### 07 ஆகஸ்ட் 2023 – தேசிய கைத்தறி தினம்

- கைத்தறி தினத்தை கொண்டாடுவதன் முதன்மை நோக்கம், கைத்தறியை ஊக்குவிப்பதும், இத்துறையில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் சமூகத்தின் முயற்சிகள் மற்றும் திறன்களை அங்கீகரிப்பதும் ஆகும்.
- "2015 ஆம் ஆண்டில், இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 7 ஆம் தேதியை தேசிய கைத்தறி தினமாக அறிவிக்க முடிவு செய்தது.
- முதல் தேசிய கைத்தறி தினம் 7 ஆகஸ்ட் 2015 அன்று பிரதமர் நரேந்திர மோடியால் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது.
- 1905 ஆம் ஆண்டு கல்கத்தாவில் (தற்போது கொல்கத்தா) இதே நாளில் சுதேசி இயக்கம் தொடங்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் தேசிய கைத்தறி தினத்தை கொண்டாட ஆகஸ்ட் 7 தேர்வு செய்யப்பட்டது.
- அப்போது பாலகங்காதர திலகர், பிபின் சந்திர பால் மற்றும் லாலா லஜபதி ராய் ஆகியோரால் இயக்கம் நடத்தப்பட்டது.

## செய்திகளில் இடம் பெற்ற நபர்கள்

### ரவீந்திரநாத் தாகூரின் 82வது நினைவு தினம் வங்கதேசத்தில் அனுசரிக்கப்படுகிறது



- ரவீந்திரநாத் தாகூரின் 82வது நினைவு தினம் இன்று வங்கதேசத்தில் அனுசரிக்கப்படுகிறது. கிரிகோரியன் நாட்காட்டியின்படி, ரவீந்திரநாத் 1941 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 ஆம் தேதி தனது 80 வயதில் இறந்தார்.
- ஆனால் பங்களாதேஷில், பெங்காலி நாட்காட்டியின் ஸ்ரபன் 22 இல் அவரது நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்ற முதல் ஐரோப்பியர் அல்லாத கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் ஆவார். 1913 இல் "கீதாஞ்சலி" என்ற கவிதைத் தொகுப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பிற்காக அவர் அதைப் பெற்றார்.
- இந்தியாவின் 'ஜன கன மன' மற்றும் பங்களாதேஷின் 'அமர் ஷோனர் பங்களா' ஆகிய இரு நாடுகளுக்கும் தேசிய கீதம் எழுதிய அரிய பெருமை தாகூர் பெற்றுள்ளது.

## காலமானார் முன்னாள் தலைமை கண்காணிப்பு ஆணையர் என்.விட்டல்



- சென்னையில் கல்வி பயின்ற என்.விட்டல் அரசுப் பணியில் இணைந்த பிறகு, பல முக்கியப் பொறுப்புகளை வகித்தார்.
- குறிப்பாக மத்திய தொலைத் தொடர்புத் துறைச் செயலராக இவர் பதவி வகித்த (1990–1996) காலகட்டத்தில் உள்நாட்டிலேயே மென்பொருள் உருவாக்கம், மென்பொருள் தொழில் நுட்பப் பூங்காக்கள் அமைக்கும் கொள்கை வகுக்கப்பட்டு வளர்ச்சி கண்டன.
- "இந்திய ஐ.டி. துறைக்கு வித்திட்டது" அந்தக் காலகட்டத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.
- பின்னர், தொலைத்தொடர்பு ஆணையம் உருவாக்கப்பட்டு தேசிய தொலைத் தொடர்பு திட்டம்–1994 அறிவிக்கப்பட்டதில் இவருக்கு முக்கியப் பங்குண்டு.
- அதையடுத்து, தலைமை கண்காணிப்பு ஆணையத்தின் தலைவராகப் பதவி வகித்தார்.

# விளையாட்டு

## மகளிர் 20 கி.மீ. நடைஓட்டம்: இந்தியாவுக்கு வெண்கலம்




- சீனாவின் செங்டு நகரில் உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளில் மகளிர் 20 கி.மீ. நடை ஓட்டத்தில் "இந்திய அணி வெண்கலம் வென்றது". "பூஜா குமாவத், நிகிதா லம்பா, மான்ஸி நேகி, பிரியங்கா" ஆகியோர் அடங்கிய இந்திய அணி 5:12:13 நேரத்தில் கடந்து வெண்கலம் வென்றது. சீனா – தங்கமும் , ஸ்லோ வோக்கியா , வெள்ளியும் வென்றன.

SHANMUGAM IAS ACADEMY

- ❖ தடகளத்தில் ஏற்கெனவே "ஜோதி, பவான யாதவ், அமலன் போரோ கைன்" வெண்கலம் வென்றிருந்தனர்.

### ஹெச்.எஸ். பிரணாய்க்கு வெள்ளிப் பதக்கம்



- ❖ ஆஸ்திரேலிய ஓபன் பாட்மின்டன் போட்டியில் இந்தியாவின் ஹெச்.எஸ். பிரணாய் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- ❖ கடந்த மே மாதம் மலேசியா மாஸ்டர்ஸ் இறுதி ஆட்டத்தில் பிரணாயிடம் தோல்வி கண்ட "வெங் ஹாங்", தற்போது அவரை வென்றிருக்கிறார்.
- ❖ இப்போட்டியில், மகளிர் ஒற்றையர் பிரிவில் மலேசியாவின் "பெய் வென் ஜாங்", கலப்பு இரட்டையரில் சீனாவின் "ஃபெங் யான் ஜீ/ஹு வாங்டாங் பிங்" கூட்டணி, மகளிர் இரட்டையரில் தென் கொரியாவின் "கிம் சோ யோங்/காங் ஹீயோங்" இணை, ஆடவர் இரட்டையரில் தென் கொரியாவின் "காங் மின் ஹியு/சியோ சியுங் ஜே" ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது.

## தமிழக நடப்பு நிகழ்வுகள்

### பாரதியார் மண்டபமாக மாறிய ஆளுநர் மாளிகை தர்பார் அரங்கம்

- ❖ சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் தர்பார் அரங்கு மகாகவி பாரதியார் மண்டபமாக பெயர் மாற்றப்பட்டதைத் தொடர்ந்து பெயர் மாற்ற கல்வெட்டை குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு திறந்து வைத்தார்.
- ❖ ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இந்த அரங்கத்தில்தான் ஆளுநரின் அரசு விழாக்கள், முதல்வர் பதவியேற்பு, சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி பதவியேற்பு விழாக்கள் உள்ளிட்டவை நடைபெறும்.
- ❖ தற்போது இந்த தர்பார் அரங்கின் பெயர் பாரதியார் மண்டபம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### காலை உணவு திட்டத்திற்காக "கூடுதல் அதிகாரிகள் நியமனம்" தமிழக அரசு அறிவிப்பு



- ❖ முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை தினந்தோறும் கண்காணிக்கும் பொருட்டு, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவுத் திட்டம்) ஆகியோருக்கு பொறுப்புகளை கூடுதலாக நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

SHANMUGAM IAS ACADEMY

- இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாணவருக்கும் காய்கறிகளுடன் 100 மி.லி. சாம்பார் மற்றும் 150–200 கிராம் உணவு வழங்கப்படும். வாரத்திற்கு இரண்டு முறையாவது உள்ளூரில் கிடைக்கும் சிறுதானியங்களைக் கொண்டு காலை உணவு வழங்கப்படும் எனவும், மாணவர்களுக்கு காலை 8 மணி முதல் 8.50 மணி வரை உணவு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆதிச்சநல்லூர் தொல்பொருள்களை வெளிநாடுகளிலிருந்து மீட்க நடவடிக்கை

- தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூரிலிருந்து வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட தொல்பொருள்கள் மீட்டுக் கொண்டுவரப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.
- மத்திய அரசின் தொல்லியல் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் அமைக்கப்படும் தொல்லியல் நிதி அருங்காட்சியகத்துக்கு அமைச்சர் நிர்மலா சீதாராமன் அடிக்கல் நாட்டினார்

- நாடு முழுவதும் 5 இடங்களில் அகழாய்வு செய்யப்படும் என்று கடந்த 2021–இல் மத்திய நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- அதில், ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ள தொல்பொருள்களைப் பொது மக்கள் பார்வையிடும் வகையில் அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது.
- இங்கு காட்சிப்படுத்தப் படும் பழங்காலப் பொருள்களை மக்கள் எளிதாக அறிந்துகொள் ளும் வகையில் புதிய தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.
- இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட 351 தொல் பொருள்கள் மீட்டுக் கொண்டு வரப்பட்டுள்ளன.
- ஆதிச்சநல்லூரில் இருந்து சுமார் 5,000–க்கும் மேற்பட்ட பொருள்கள் வெளி நாடுகளில் உள்ளன.
- அவற்றையும் மீட்டுக் கொண்டுவர மத்திய தொல்லியல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறது
- நாட்டின் வரலாற்றை நினைவுகூரும் வகையில் அருங்காட்சியகம் தில்லியில் அமைக்கப்படவுள்ளது.
- இதன்படி, 75 திட்டங்கங்களுக்கு ரூ.6,000 கோடி ஒதுக்கீடு , செய்யப்பட்டுள்ளது.
- இந்திய பிரதமர்கள் பற்றி அறிந்துகொள்ள அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளன
- சுதந்திர போராட்டத்தில் பழங்குடியினர் பங்களிப்பை விளக்கும் வகையில் பழங்குடியினர் அதிகம் வாழும் 10 இடங்களில் அருங்காட்சியளும் வகையில் அருங்காட்சியகம் கங்களும், பழங்கால கப்பல் வணிகத்தை விளக்கும் அருங்காட்சியம் அமைக்கப்படவுள்ளன
- பனையோலைகள், செப்புப் பட்டயங்களில் எழுதப்பட்ட வரலாற்றுக் குறிப்புகளை எண்மமயமாக்கும் (டிஜிட்டல்) பணியை தொல்லியல் துறையினர் மேற் கொண்டு வருகின்றனர்.
- இது வரை 3 கோடி பக்கங்களில் பனை யோலைக் குறிப்புகள் எண்மமயமாக்கப்பட்டுள்ளன
- **மத்திய தொல்லியல் துறை தலைமை இயக்குநர் கிஷோர் குமார் பாஷா**

# திட்டங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு

## "உத்வேகம்' திட்டம்"



- பிரதமரின் 'உத்வேகம்' செயல் திட்டத்தின் அணுகுமுறை மற்றும் பயன்பாடானது, "நேரம் மற்றும் செலவை பெருமளவில் மிச்சப்படுத்தக் கூடியதாகும்.
- பன்முக ஒருங்கிணைப்புக்கான தேசிய பெரும் செயல்திட்டமான 'உத்வேகம்' (கதி சக்தி), "நாடு முழுவதும் உள்கட்டமைப்புத் திட்டங்களின் ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் அமலாக்கத்தை உறுதி செய்யும் எண்ம தளம்" என்பது குறிப்பிடத்தக்கது.

# மாநில நடப்பு விவகாரங்கள்

## ஜம்மு & காஷ்மீரின் வடக்கு ரயில்வே விரைவில் பனிஹால்–பாரமுல்லா வழித்தடத்தில் முதல் மின்சார ரயிலை இயக்க உள்ளது.

- ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில், 324 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின்மயமாக்கல் திட்டம் இறுதி கட்டத்தில் இருப்பதால், 137 கிமீ பனிஹால்–பாரமுல்லா வழித்தடத்தில் காஷ்மீரின் முதல் மின்சார ரயிலை தொடங்குவதன் மூலம் வடக்கு ரயில்வே விரைவில் மற்றொரு மைல்கல்லை கடக்க உள்ளது. இந்த திட்டத்திற்கான பணிகள் ஆகஸ்ட் 2019 முதல் நடைபெற்று வருவதாக இந்திய ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.
- பிட்டு குமார், பொறியாளர் ஆர்எஸ் இன்ஃப்ரா பிரைவேட் லிமிடெட் கூறுகையில், 90% மின்மயமாக்கும் பணிகள் முடிந்துள்ளதால், அடுத்த மாதத்திற்குள் திட்டம் திறப்பு விழாவுக்கு தயாராகிவிடும் என்றார்.



- தற்போது, 19 ரயில்கள் சேவையில் உள்ளன, ஏழு ரயில்கள் ஜம்மு & காஷ்மீரில் பாரமுல்லா–பனிஹால் செக்டாரில் தொடர்ந்து இயக்கப்படுகின்றன.
- இந்த ரயில்களில் தினமும் மாணவர்கள், அலுவலகம் செல்பவர்கள் என சுமார் 30,000 பயணிகள் பயணிக்கின்றனர். காஷ்மீர் அதன் முதல் ரயில் சேவையை 2013 இல் தொடங்கியது, இது அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கால் தொடங்கப்பட்டது.

## காண்டாமிருக பாதுகாப்பு திட்டத்தை மீண்டும் பீகார் 'காண்டாமிருக பணிக்குழு' அமைக்க உள்ளது

SHANMUGAM IAS ACADEMY

- "வால்மீகி புலிகள் சரணாலயம் (VTR)" தேசிய காண்டாமிருக பாதுகாப்பு திட்டத்தின் கீழ், அங்கு நாடு முழுவதும் உள்ள மற்ற காப்பகங்களில் இருந்து காண்டாமிருகங்கள் கொண்டு வரப்படலாம்.



**மறு அறிமுகம் திட்டம்**

- இந்த குழு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டு, சமீபத்தில் தனது அறிக்கையை சமர்ப்பித்தது மற்றும் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பீகார் மாநில அரசு 'ரினோ டாஸ்க் ஃபோர்ஸ்' அமைக்கப்படவுள்ளது.
- அடுத்த இரண்டு ஆண்டுகளில், வால்மீகி புலிகள் சரணாலயத்தில் காண்டாமிருகங்களைத் **5%** அதிகரிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**காண்டாமிருக பாதுகாப்பில் இந்தியாவின் பங்கு**

- ஒரு கொம்பு காண்டாமிருகத்தை பாதுகாப்பதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது, உலக காண்டாமிருகத்தின் சுமார் **75%** இந்தியாவில் வசிக்கிறது மற்றும் **93%** க்கும் அதிகமான இந்திய காண்டாமிருக மக்கள் அசாமில் உள்ள "காசிரங்கா தேசிய பூங்காவில்"வாழ்கின்றன.

**வால்மீகி புலிகள் காப்பகம்**

- பீகாரின் மேற்கு சம்பாரண் மாவட்டத்தில் அமைந்துள்ள வாலிமிக் புலிகள் காப்பகம், **1990** ஆம் ஆண்டு **18**வது புலிகள் காப்பகமாக நிறுவப்பட்டது மற்றும் புலிகள் மக்கள்தொகை அடர்த்தியில் **4**வது இடத்தில் உள்ளது.

## தேசிய நடப்பு நிகழ்வுகள்

### நாடு முழுவதும் ரூ.24,470 கோடியில் 508 ரயில் நிலையங்களை புதுப்பிக்க பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்

- அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 18 ரயில் நிலையங்கள் உட்பட நாடு முழுவதும் 508 ரயில் நிலையங்களை ரூ.24,470 கோடி மதிப்பில் அதிநவீன வசதிகளுடன் புதுப்பிக்க பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.
- நாடு முழுவதும் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் 508 ரயில் நிலையங்கள் ரூ.24,470 கோடியில் புதுப்பிக்கப்படுகின்றன.

SHANMUGAM IAS ACADEMY

- இதில் தமிழகத்தில் அரக்கோணம், செங்கல்பட்டு, கூடுவாஞ்சேரி, கும்மிடிப்பூண்டி, ஜோலார்பேட்டை, கரூர், மயிலாடுதுறை, நாகர்கோவில், பெரம்பூர், போத்தனூர், சேலம், தென்காசி, தஞ்சாவூர், திருப்பூர், திருத்தணி, திருவள்ளூர், விழுப்புரம், விருதுநகர் ஆகிய 18 ரயில்நிலையங்கள் ரூ.515 கோடியில் புதுப்பிக்கப்படுகின்றன.
- இத்திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து, காணொலி மூலம் அவர் பேசியதாவது: நாடு சுதந்திரம் அடைந்து 75–வது ஆண்டில், 'புதிய இந்தியா, வளர்ந்த இந்தியா' என்ற இலக்கை நோக்கி விரைவாக சென்று கொண்டிருக்கிறது. புதிய சக்தி, புதிய உத்வேகம், புதிய இலக்குகளுடன் நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இந்திய ரயில்வே வரலாற்றில் தற்போது புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. நாட்டில் உள்ள 1,300 முக்கிய ரயில் நிலையங்கள் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட உள்ளன.
- முதல் கட்டமாக, அதில் 508 ரயில் நிலையங்களுக்கு தற்போது அடிக்கல் நாட்டப்படுகிறது. நாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் இத்திட்டத்தின் பயன் கிடைக்கும்.
- உத்தர பிரதேசம், ராஜஸ்தானில் தலா 55 ரயில் நிலையங்கள் ரூ.4,000 கோடியில் மேம்படுத்தப்படும்.
- மத்திய பிரதேசத்தில் 34 நிலையங்கள் ரூ.1,000 கோடியிலும், மகாராஷ்டிராவில் 44 நிலையங்கள் ரூ.1,500 கோடியிலும், தமிழகத்தில் 18 நிலையங்கள் ரூ.515 கோடியிலும் புதுப்பிக்கப்பட உள்ளன.
- கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களிலும் முக்கிய ரயில் நிலையங்கள் புதுப்பிக்கப்பட உள்ளன.

## நாடாளுமன்றத்தில் அமளிக்கு இடையே நிறைவேறிய மசோதாக்கள்

- மழைக்கால கூட்டத்தொடரில், எதிர்க்கட்சிகளின் அமளி மற்றும் வெளிநடப்புக்கு இடையே மக்களவையில் 15 மசோதாக்கள் நிறை வேறியுள்ளன.
- இதில் 13 மசோதாக்கள், அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதத்துக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு கடந்த 26–ஆம் தேதிக்கு பின்னர் நிறைவேற்றப்பட்டுள்ளன
- மாநிலங்களவையில் இதுவரை 12 மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.
- இரு அவைகளும் ஒப்புதல் அளித்த மசோதாக்களின் எண்ணிக்கை 9 ஆகும்.
- வனப் பாதுகாப்பு திருத்த மசோதா, பல்லுயிர் திருத்த மசோதா, பல மாநில கூட்டுறவு சங்கங்கள் திருத்த மசோதா உள்ளிட்ட முக்கிய மசோதாக்கள் சிறிய அளவிலான விவாதத்துடன் நிறைவேற்றப்பட்டன.
- மக்களவையில் 07–ஆம் தேதி எண்ம தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதா, தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை மசோதா, மருந்தகங்கள் திருத்த மசோதா, மத்தியஸ்த

SHANMUGAM IAS ACADEMY

மசோதா உள்ளிட்டவை பரிசீலனை மற் றும் நிறைவேற்றத்துக்கு பட்டியலிடப்பட்டுள்ளன.

### 38 மருந்துப் பொருட்களின் உற்பத்தி இந்தியாவில் தொடங்கியது

- கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இந்தியாவில் 38 மருந்துப் பொருட்கள் (ஏபிஐ) உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தியா இதுவரை இந்த மருந்துப் பொருட்களுக்கான இறக்குமதியை நம்பியிருந்த நிலையில், இந்தத் துறைக்கான உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை (பிஎல்ஐ) திட்டத்தின் கீழ் இந்தத் தயாரிப்பு தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த நிலையில், உற்பத்தி அடிப்படையிலான ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலம் 54 மருந்துப் பொருட்களுக்கான இறக்குமதியை நாடு சார்ந்திருப்பதை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- இதில் 38 மூலப்பொருட்கள் உற்பத்தி கடந்த ஓராண்டில் உள்நாட்டில் தொடங்கப்பட்டுள்ளது
- தன்னம்பிக்கை இந்தியாவிற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு
- இத்துறைக்கு ரூ.15,000 கோடி உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது.

**54 புதிய மருத்துவக் கல்லூரிகள்**

- கிராமப்புறங்களில் குறைந்த விலையில் தரமான மருத்துவ சேவைகள் கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.
- இதற்காக, கடந்த 9 ஆண்டுகளில் நாட்டில் இளங்கலை மருத்துவப் படிப்பு (எம்பிபிஎஸ்) இடங்களின் எண்ணிக்கை 52,000லிருந்து 1,07,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### டெல்லி ஜி.20 மாநாட்டில் பங்கேற்க அமெரிக்க அதிபர் ஜோபைடன் செப்.7–ல் இந்தியா வருகை

- டெல்லியில் நடைபெற வுள்ள ஜி.20 மாநாட்டில் பங்கேற்க அமெரிக்க அதிபர் ஜோபைடன் செப்டம்பர் 7–ம் தேதி இந்தியா வருகை தரவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.
- ஜி.20 அமைப்புக்கு இந்த ஆண்டு இந்தியா தலைமை வகிக்கிறது.
- அந்த அமைப்பின் உச்சி மாநாடு டெல்லி யில் வருகிற செப்டம்பர் 9 மற்றும் 10–ம் தேதிகளில் நடக்கிறது.
- ஜோபைடன் அமெரிக்க அதிபராக பதவியேற்ற பிறகு முதல் முறையாக இந்தியா வர உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச உறவு

### எண்ம அடையாளத் திட்டம்: இலங்கைக்கு இந்தியா ரூ.45 கோடி முன்பணம்



- ❖ இலங்கையில் ஆதார் போன்ற தனித்துவ எண்ம (டிஜிட்டல்) அடையாளத் திட்டத்தை செயல்படுத்த அந்நாட்டுக்கு இந்தியா ரூ.45 கோடி நிதியுதவியை முன்பணமாக வழங்கியுள்ளது.
- ❖ இப்பணம் கடந்த 2022–ஆம் ஆண்டு இந்தியா–இலங்கை இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது .
- ❖ "இலங்கை மக்களின் முகம், கருவிழி, கைவிரல் ரேகை போன்ற பயோமெட்ரிக் தரவுகள், சுயவிவரங்கள் ஆகியவை திரட்டப்படுவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்".
- ❖ ஒவ்வொருவருக்கும் "அடையாள அட்டைகள் வழங்க" அந்த விவரங்கள் சேகரித்து வைக்கப்படும்.

SHANMUGAM IAS ACADEMY

## SHANMUGAM IAS ACADEMY

YOUR DREAM....! OUR RESPONSE.....!

# தமிழ்நாடு அளவிலான இலவச தேர்வு

# TNPSC GROUP I ,II ,IV

## மனதின் குரல் தேர்வு & அம்ரித் மஹோத்சவ் தேர்வு

மனதின் குரல் தேர்வு ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை

அம்ரித் மஹோத்சவ் தேர்வு ஒவ்வொரு மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமை

**STARTS ON – 12 AUGUST 2023**

**ONLINE & OFFLINE TEST**



FOR REGISTRATION Scan QR code

9994146662,9994427714

@ShanmugamIASAcademy @ShanmugamIASAcademy Shanmugamiasacademy Shanmugamiasacademy

COIMBATORE
550/3, DR NANJAPPA ROAD,
OPPOSITE TOWN BUS STAND,
COIMBATORE GANDHIPURAM, 641009

9500785666

TIRUNELVELI
25, SUNDARI COMPLEX, NANGUNERI ROAD,
NEAR NEW BUS STAND, TIRUNELVELI, 627005



SHANMUGAM IAS ACADEMY
YOUR DREAM....! OUR RESPONSE.....!
TAMILNADU LEVEL FREE TEST
TNPSC GROUP I ,II ,IV
MANN KI BAAT – TEST & AMRIT MAHOTSAV TEST
MANN KI BAAT TEST ON EVERY 4TH SUNDAY
AMRIT MAHOTSAV TEST ON EVERY 2ND SATURDAY
STARTS ON – 12 AUGUST 2023
ONLINE & OFFLINE TEST
9994146662,9994427714
@ShanmugamIASAcademy
@ShanmugamIASAcademy
Shanmugamiasacademy
Shanmugamiasacademy
COIMBATORE
550/3, DR NANJAPPA ROAD, OPPOSITE TOWN BUS STAND, COIMBATORE GANDHIPURAM, 641009
TIRUNELVELI
25, SUNDARI COMPLEX, NANGUNERI ROAD, NEAR NEW BUS STAND, TIRUNELVELI, 627005